செங்கோட்டை நகராட்சி

சாதாரண கூட்டம்

**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 2025ம் ஆண்டு ஏப்ரல் 30 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற இருக்கின்றது. எனவே துணைத் தலைவர் அவர்கள் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**மன்றப்பொருள் : 01**

செங்கோட்டை நகராட்சிக்கு பொதுசுகாதார பிரிவில் கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்கும் டப்பாக்கள் 150 வாங்குவதற்கு மன்ற அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் (நகர்மன்ற அனுமதி எண்:94, நாள்:21.3.2025) விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும், பின்னேற்புக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கருவியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|
| 1. | கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்கும் டப்பாக்கள் (50 Lt கொள்ளளவு) 60 எண்ணம் | M.S.கெமிக்கல்ஸ், 48/169, காந்தி ரோடு, செங்கோட்டை | ஒரு டப்பாவிற்கு 60x250=15000/- |
| 2. | | Lucky Chemicals, 126, காந்தி ரோடு, செங்கோட்டை | ஒரு டப்பாவிற்கு 60x200=12000/- |

. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள Lucky Chemicalas நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 02**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டர் பழுதாகி செயல்படாத நிலையில் உள்ளது. தற்சமயம் அடிக்கடி மின்தடை அடிக்கடி ஏற்பட்டு வருவதால் அலுவலக நிர்வாக பணிகள் பாதிக்கப்பட்டு வருகிறது. வரி வசூல் பணியும் பாதிக்கப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் காணொலி ஆய்வு கூட்டம் நடைபெறும் நேரங்களில் மின்தடை ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்குள்ளாக நேரிடுகிறது. எனவே மேற்படி 15kw திறனுள்ள ஜெனரேட்டரை பழுது நீக்கம் செய்ய சம்பந்தப்பட்ட ஜெனரேட்டர் நிறுவனத்தின் (கிரிலோஸ்வர்) முன் விலைப்புள்ளி கோரியதில் பழுதுக்கான செலவினம் ரூ.35000/-க்கு முன் விலைப்புள்ளி அளித்துள்ளதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) அலுவலக நிர்வாக பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 03**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான மின் மயானத்தில் உள்ள 2HP மோட்டார் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 2HP மோட்டார் பழுதாகியுள்ளதால் அவற்றை பழுது நீக்கம செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர உத்தேச செலவினம் ரூ.10000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம். அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 04**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:29880/2016/IT, நாள்:21.03.2025-ன்படி இந்நகராட்சிக்கான UTIS (urban tree information system payment of bandwidth cost) தரைதள இணையதள சேவை கட்டணம் 2025-2026ம் ஆண்டிற்கு நான்கு காலாண்டிற்கான தோரயமான கேட்பு தொகை ரூ.2,00,000/-செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** (ந.க.எண்:1035/2022/சி1)

1) மேற்படி தொகையை செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) எதிர்நோக்கப்படும் உத்தேச செலவினம் தொகை ரூ.2,00,000/- வருவாய் மற்றும் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 05

செங்கோட்டை நகராட்சி 12வது வார்டில் ஆணைமலை அய்யனார் கோவில் அருகே கழிவு நீர் சாலைகளில் செல்வதனை தடுக்கும் வகையில் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கு நகராட்சி பொறியாளரால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீட்டு செலவினம் ரூ.2,50,000/- (இரண்டு லட்சத்து அம்பதாயிரம்)ற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதியும் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : (ந.க.எண்:207/2025/இ1)

1) பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 06

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:22, சுடலையாண்டி காம்பவுண்ட் பகுதியில் 15 வீடுகளுக்கு மேல் சீரான குடிநீர் கிடைக்காததால் அப்பகுதியில் 150 மீட்டர் நீளத்திறஅகு ½ அடி ஆழத்தில் உள்ள குழாய்களை 1 அடி ஆழத்தில் 3" PVC Pipe பதித்து சீரான குடிநீர் செய்யவதற்கான உத்தேச செலவீனம் ரூ.16,000/- (பதினாறாயிரம்)க்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின், அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 07

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:13, வடக்குத்தியம்மன் கோவில் தெருவில் புதிதாக ஆழ்குழாய் கிணற (போர்வெல்) அமைத்தல் மற்றும் ஏற்கனவே இருக்கும் அடிபம்பில் மின் மோட்டாரும் அதன்மேல் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.3.00 (மூன்று இலட்சம்) அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : (ந.க.எண்:233/2025/இ1)

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 08

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட நவீன ஆடு அறுக்கும் மனையில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு இல்லாததால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தடுக்கும் வகையில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு ஏற்படுத்திட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.5.00 (ஐந்து இலட்சம்) அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : (244/2025/இ1)

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 09

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1 மற்றும் 2 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு தண்ணீர் திறக்க கேட் வால்வு ப.ன்படுத்தப்பட்டு வருகிறது. அதில் 4" Sluise Valve பயன்படுத்தினால் குடிநீர் வினியோகம் சீராக செய்ய இயலும் என்பதால் 4" Sluise Valve மாற்றிட ஆகும் உத்தேச செலவீனம் ரூ.0.30 (முப்பதாயிரம்) அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : (244/2025/இ1)

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை குடிநீர் வடிகால் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 10

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் 'சி'கிரேடு பேருந்து நிலையமாக செயல்பட்டு வருவதால் இப்பேருந்து நிலையத்திற்கு பேருந்து நுழைவு கட்டணமாக ரூ.8/வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் நுழைவு கட்டண உரிமத்திற்கு 2024-2025 ம் நிதியாண்டுவுடன் குத்தகை உரிமம் மூன்றாண்டு காலம் முடிவுற்ற நிலையில் இந்இனத்திற்கு 2025-2026ம் நிதியாண்டு முதல் மூன்றாண்டு காலம் குத்தகை உரிமம் வழங்க வேண்டி உள்ளதால் கடைசியாக

குத்தகை உரிமம் வழங்கப்பட்ட தொகை 3.13லட்சத்தில் இருந்து 5%உயர்வு செய்து அரசு மதிப்பு ரூ3.29 லட்சமாகவும் மற்றும் வைப்பு தொகை 1.50 லட்சம் காப்பு தொகை ரூ.1.50 லட்சமாக நிர்ணயம் செய்து 01.04.2025 முதல் குத்தகை உரிமம் வழங்க முன்கூட்டி பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி இந்நாளில் 22.02.2025, 24.02.2025 ,17.03.2025 மற்றும் 28.03.2025 ஆகிய தினங்களில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி வைக்கப்பட்டதிலும் குத்தகை உரிமம் கோர எவரும் முன்வரவில்லை.

இவ்வாறு பல முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவித்தும் யாரும் கலந்து கொள்ள முன்வராத நிலையில் அரசாணை(2ப) எண் 66 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 06.08.2024 பத்தி 3 உபபத்தி VII ன்படி தொடர்ந்து பல முறை ஏலம் நடத்தியும் (குறைந்தது நான்கு முறை ஏலம் நடத்தப்பட்டுயிருக்க வேண்டும்)யாரும் நிர்ணயம் செய்த தொகைக்கு ஏலம் கோரப்படாத குத்தகை/உரிமஇனங்களில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டு ஏலம் கோரப்பட்ட தொகையில் இருந்து 10 சதவீதம் தொகையை குறைத்து மறுஏலம் கோரலாம்.அதற்கு மேல் குறைக்கப்பட வேண்டிய சூழல் உள்ள நிலையில் உரிய காரணங்களை தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரலாம் எனவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே 2024-2025 ல் கடைசியாக நிர்ணயம் செய்யப்பட்ட ஏலத்தொகை ரூ.3,13,000/- என உள்ளதனையும், இதற்கான வைப்புத் தொகை ரூ,1.50 இலட்சம் மற்றும் காப்புத்தொகை ரூ.1.50 இலட்சம் என்பதையும் மறு பரிசிலனை செய்து குறைவு செய்வது தொடர்பாக முடிவு செய்ய வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ந.க.எண்.3090/2015/அ1

1) கடந்த ஆண்டு ஏலத்தொகை ரூ.313110/- மற்றும் மூன்றாண்டுகளுக்கு சராசரி தொகை ரூ.298436/- என உள்ள நிலையில் அரசு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதில் ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை என்பதால் மன்றம் அரசு மதிப்பு தொகையினை 10 விழுக்காட்டிற்கு குறைவில்லாமல் குறைவு செய்வது தொடர்பாக பரிசிலிக்கலாம்.
2) வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை ரூ,3.00 இலட்சம் என்பதனை மன்றம் பரிசிலித்து முடிவு செய்ய முன்வரலாம்.

**மன்றப்பொருள் : 11**

மாண்புமிகு சட்டப் பேரவை கூட்டத் தொடர் நகராட்சி நிர்வாகத்துறை மானியக் கோரிக்கையில் செங்கோட்டை நகராட்சியின் குடிநீர் திட்டம் ரூ,500.00 இலட்சத்தில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பின்படி அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Pantheon Developer | மதிப்பீட்டில் 1.5% |
| 2. | Enviro Front | மதிப்பீட்டில் 2% |

அலுவலக குறிப்பு:-

அ) வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டில் 1.5% விலைப்புள்ளி
வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி
விலைப்புள்ளி கோரியதையும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Pantheon Developer-க்கு வேலை உத்தரவு
வழங்கி DPR தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

இ) விரிவான திட்ட அறிக்கைக்குரிய கட்டணம் குடிநீர் வடிகால் நிதி மூலம்
செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 12**

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான ஆடறுப்பு மனை உரிம கட்டணமாக ரூ.10/-வீதம் ஒரு ஆட்டிற்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆடறுப்புமனை பத்து ஆண்டுகளாக துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வந்துள்ளது.மேலும் 2024-2025ம் நிதியாண்டில் இந்நகர்மன்ற தீர்மான எண்.87 நாள் 23.10.2024.ன்படி திரு.அய்யப்பன் என்பவருக்கு 07.11.2024 முதல் ரூ.1.24 லட்சத்திற்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட குத்தகைதாரர் 2024-2025 ம் நிதியாண்டில் குத்தகை உரிமதொகை அதிகமாக இருப்பதால் குத்தகை உரிமத்தை நிறுத்திக்கொள்கிறன் என்று குத்தகைதாரர் இரத்து செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டதால், இந்நகரமன்ற தீர்மான எண் 87 நாள் 23-03-2025 ன்படி 2024-2025 நிதியாண்டு மார்ச் 31 வுடன் குத்தகை உரிமத்தை இரத்து செய்யப்பட்டதால் ஆடறுப்பு உரிமத்திற்கு கடைசியாக நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகை தொகை ரூ.1.24 லட்சத்திற்கு 5%உயர்வு செய்து அரசு மதிப்பு ரூ 1.30 லட்சமாக நிர்ணயம் செய்து 2025-2026

நிதியாண்டிற்கு முன்கூட்டி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி இந்தேதியில் 27.03.2025 ல் வைக்கப்பட்டதில் எவரும் குத்தகை உரிமம் கோர முன்வரவில்லை.

இவ்வாறு பல முறை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிவித்தும் யாரும் கலந்து கொள்ள முன்வராத நிலையில் அரசாணை(2ப) எண் 66 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 06.08.2024 பத்தி 3 உபபத்தி VII ன்படி தொடர்ந்து பல முறை ஏலம் நடத்தியும் (குறைந்தது நான்கு முறை ஏலம் நடத்தப்பட்டுயிருக்க வேண்டும்)யாரும் நிர்ணயம் செய்த தொகைக்கு ஏலம் கோரப்படாத குத்தகை/உரிமஇனங்களில் ஏற்கனவே நிர்ணக்கப்பட்டு ஏலம் கோரப்பட்ட தொகையில் இருந்து 10 சதவீதம் தொகையை குறைத்து மறுஏலம் கோரலாம்.அதற்கு மேல் குறைக்கப்பட வேண்டிய சூழல் உள்ள நிலையில் உரிய காரணங்களை தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரலாம் எனவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே குத்தகை உரிமத்தொகையில் அரசு மதிப்பினையும் வைப்புதொகையினையும் குறைத்து குத்தகை உரிமத்தொகையினை நிர்ணயம் செய்தால் ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வருவதாக தெரிவித்து வருவதால் மன்றம் பரிசிலனை செய்து அரசு மதிப்பு தொகை 2024-2025 ல் ஏலத்தொகை ரூ.124000/- என உள்ளதனையும், இதற்கான வைப்புத் தொகை ரூ.60000/- மற்றும் காப்புத்தொகை ரூ.60000/- என்பதையும் மறு பரிசிலனை செய்து குறைவு செய்வது தொடர்பாக மன்றம் முடிவு செய்ய வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ந.க.எண்.3090/2015/அ1

1) கடந்த ஆண்டு ஏலத்தொகை ரூ.124000/- மற்றும் மூன்றாண்டுகளுக்கு சராசரி தொகை ரூ.117800/- என உள்ள நிலையில் அரசு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதில் ஏலம் கேட்க ஒருவரும் முன்வரவில்லை என்பதால் மன்றம் அரசு மதிப்பு தொகையினை 10 விழுக்காட்டிற்கு குறைவில்லாமல் குறைவு செய்வது தொடர்பாக பரிசிலிக்கலாம்.
2) வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை ரூ.1.20 இலட்சம் என்பதனை மன்றம் பரிசிலித்து முடிவு செய்ய முன்வரலாம்.

**மன்றப்பொருள் : 13**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ் தினசரி சந்தை வணிக வளாகம், வாரச்சந்தை வணிக வளாகங்கள் கட்டப்பட்டு அவற்றிக்கு நகர்மன்ற தீர்மான எண்.39 நாள்.08.02.2024ன் அனுமதியின் படி முன் கூட்டியே பொது ஏலம் கோரப்பட்டு தினசரி சந்தையில் உள்ள வெளிப்புறக் கடை எண்.1 முதல் 8 கடைகள் தினசரி சந்தை உட்புற கடை எண். 6,7, மற்றும் 8 வாரச்சந்தை வெளிப்புற கடைகள் 1 முதல் 11 வரை உள்ள கடைகள் குத்தகைதாரருக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. கீழ்கண்ட வணிக வளாகங்களில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளிகள்

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | கட்டிடத்தின் அளவு | அரசு மதிப்பு ரூ (மாதம்) |
|---|---|---|---|
| 1. | தினசரி சந்தை உட்புற கடை எண்.1 | 10x10 | 3500 |
| 2. | தினசரி சந்தை உட்புற கடை எண்.2 | 10x10 | 3500 |
| 3. | தினசரி சந்தை உட்புற கடை எண்.3 | 10x10 | 3500 |
| 4. | தினசரி சந்தை உட்புற கடை எண்.4 | 10x10 | 3500 |
| 5. | தினசரி சந்தை உட்புற கடை எண்.5 | 10x10 | 3500 |
| 6. | தினசரி சந்தை உட்புற கடை எண்.9 | 10x10 | 3500 |
| 7. | தினசரி சந்தை உட்புற கடை எண்.10 | 10x10 | 3500 |
| 8. | தினசரி சந்தை உட்புற கடை எண்.11 | 10x10 | 3500 |
| 9. | தினசரி சந்தை உட்புற கடை எண்.12 | 10x10 | 3500 |
| 10. | தினசரி சந்தை உட்புற கடை எண்.13 | 10x10 | 3500 |
| 11. | தினசரி சந்தை உட்புற கடை எண்.14 | 10x10 | 3500 |
| 12. | தினசரி சந்தை உட்புற கடை எண்.15 | 10x10 | 3500 |
| 13. | தினசரி சந்தை உட்புற கடை எண்.16 | 10x10 | 3500 |
| 14. | தினசரி சந்தை உட்புற கடை எண்.17 | 10x10 | 3500 |
| 15. | தினசரி சந்தை உட்புற கடை எண்.18 | 10x10 | 3500 |
| 16. | தினசரி சந்தை உட்புற கடை எண்.19 | 10x10 | 3500 |
| 17. | வாரச்சந்தை வெளிப்புற கடை எண்.12 | 10x10 | 3700 |
| | | | 59700 |

10.06.2024, 20.09.2024, 04.10.2024, 02.12.2024, 22.01.2025,24.02.2025 மற்றும் 17.03.2025 ஆகிய நாட்களில் பல முறை தொடர் ஏலம் வைக்கப்பட்டும் குத்தகை இனத்தினை ஏலம் கோர யாரும் முன் வரவில்லை. தினசரி சந்தை உட்புறக் கடைகள் அனைத்தும் மெயின் ரோட்டிலிருந்து உட்புறமாக அமைந்துள்ளதாலும் மற்றும்

வாரச்சந்தை வெளிப்புறக் கடை எண்.12 வாரச்சந்தை கூடும் நாள் மட்டும் கடை திறக்கப்படுவதால் பொது நடைபாதை இல்லாத காரணத்தாலும் மேற்படி பட்டியலில் கண்ட இனங்களுக்கு குத்தகை உரிமம் கோர யாரும் முன்வரவில்லை இவ்வாறு பல முறை ஏல ஒப்பந்தபுள்ளி அறிவித்தும் யாரும் கலந்து கொள்ள முன்வரவில்லை.

அரசாணை (2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை, நாள்.06.08.2024 பத்தி எண் 3 உப பத்தி (IV)ன்படி கடை கட்டிடமானது அமைவிடத்தை பொறுத்து முகப்பு பகுதியை தவிர மையப்பகுதி நேரடியாக அனுக முடியாத கடைகள் உள்ள பகுதி மற்றும் கழிப்பறை அருகே உள்ள இனங்களுக்கு அரசு மதிப்பிலிருந்து 10% குறைவு செய்யப்பட்டு நிர்ணயம் செய்யலாம்.எனவும் உபபத்தி (VII)ல் தொடர்ந்து பல முறை ஏலம் நடத்தியும் யாரும் நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு ஏலம் கோராத நிலையில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையில் இருந்து 10% சதவீதம் தொகையை குறைத்து மறு ஏலம் கோரலாம் எனவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே பட்டியலில் கண்ட கடைகளுக்கு தினசரி சந்தை உட்புற கடைகள் 10X10 உள்ளவற்றின் வாடகை தொகை ரூ.3500/- மற்றும் வாரச்சந்தை வெளிப்புறக்கடை 10X10 வாடகை தொகை ரூ.3700/-அரசு மதிப்பில் இருந்து 10 விழுக்காடு அதிகமாக இல்லாமல் குறைவு செய்வதற்கும் காப்புத்தொகை மற்றும் வைப்புத் தொகை குறைவு செய்வது தொடர்பாக மன்றம் பரீசிலனை செய்து முடிவு செய்ய வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:3090/2015/அ1

1) வாடகை தொகை அரசு மதிப்பு ரூ.3500/- என்பதலிருந்து வாரச்சநதை உட்புற கடை 12 ரூ,3700/- என்பதலிருந்தும் 10 விழுக்காடு அதிகமில்லாமல் குறைவு செய்வது தொடர்பாக மன்றம் பரீசிலித்து முடிவு செய்யலாம்.
2) காப்புத்தொகை மற்றும் வைப்புத்தொகை ரூ.2.00 இலட்சம் என்பதனை மன்றம் மறு நிர்ணயித்து வழங்கிட பரீசிலிக்கலாம்.

**மன்றப்பொருள் : 14**

செங்கோட்டை நகராட்சி அலுவலகம் கட்டப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துள்ளதால் கட்டிடத்தின் மேற்கூரை தளக்கற்கள் சேதமடைந்துள்ளது. மழைக்காலங்களில் மேலும் சேதம் ஏற்படுவதை தடுக்கும் பொருட்டும், மழைநீர் அலுவலகத்திற்குள் புகாமல் தடுக்கும் பொருட்டும் பராமரிப்பு பணி செய்யவும், சுவர்களுக்கு வர்ணம் பூசவும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.6.00 (ஆறு இலட்சம்)திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) அலுவலக நலனின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 15**

செங்கோட்டை நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் 1 முதல் 24 வார்டு நகர்மன்ற உறுப்பினர்கள் அமரும் இருக்கைகள் சேதமடைந்த நிலையில் இருப்பதால் அதனை சரி செய்ய மதீப்பிட்டு தொகை ரூ.1.25 (ஒரு லட்சத்து இருபத்தைதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) நகர்மன்ற பணிகளின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 16**

செங்கோட்டை நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் தலைவர், துணைத் தலைவர், அனைத்து வார்டு நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் புதிதாக மைக் அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.2.25 (இரண்டு லட்சத்து இருபத்தைதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) நகர்மன்ற பணிகளின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 17**

செங்கோட்டை நகராட்சி அலுவலக வளாகம் முழுவதும் புதிதாக CCTV கேமரா பெருத்தும் பணி மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.3.00 (மூன்று லட்சத்து) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) நகராட்சி அலுவலகத்தின் பாதுகாப்பு அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 18**

செங்கோட்டை நகராட்சியில் 1 முதல் 24 வார்டுகளிலும் முழுமையாக நிரம்பிய வாறுகால்களை தூர் வாரும் பணி மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.1.80 (ஒரு லட்சத்து எண்பதாயிரம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 19**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வரையுள்ள வார்டுகளில் போரிலிருந்து எடுக்க முடியாத மின் மோட்டார்களை Chain Block இயந்திரத்தின் மூலம் மேலே தூக்கி சரி செய்யும் வகைக்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.20 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்) ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 20**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மின் மோட்டார்களை மாற்றி புதிய கம்பரசர் மோட்டார் 5 எண்ணம் வாங்கவும், மினி பவர் பம்புகளை செயல்படுத்தவும் ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.80 (ஒரு இலட்சத்து எண்பதாயிரம்) ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 21**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:3, கொட்டாரம் ரோடில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மினி பவர் பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.50 (ஒரு இலட்சத்து அம்பதாயிரம்)த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 22**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:5, தெற்கு ரத வீதியில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மினி பவர் பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.50 (ஒரு இலட்சத்து அம்பதாயிரம்)த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 23**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:3, முப்புடாதி அம்மன் கோவில் அருகில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மினி பவர் பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.50 (ஒரு இலட்சத்து அம்பதாயிரம்)த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 24**

செங்கோட்டை நகராட்சியில் 24 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளை கிணற்று கைபம்புகள் 113 எண்கள் பழுது நீக்கம் செய்யவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண். 61 நாள்.21.03.2025 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 02.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சியில் 24 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளை கிணற்று கைபம்புகள் 113 எண்கள் பழுது நீக்கம் செய்யவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் பணி | 2.50 | திரு.P.இசக்கி 0.01% குறைவு |
| | | | திரு.S.பரமசிவன் ஒப்பந்த மதிப்பை விட 0.2 % அதிகம் |

அலுவலக குறிப்பு : (ந.க.எண்.08/2025/இ1)

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.P.இசக்கி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**மன்றப்பொருள் : 25**

செங்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 24 வரை மினி பவர் பம்பு மனி மோட்டார், தலைமை நீரேற்று நிலையம், நுன் உரக்குடில் ஆகிய மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண். 60 நாள்.21.03.2025 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 02.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 24 வரை மினி பவர் பம்பு மனி மோட்டார், தலைமை நீரேற்று நிலையம், நுன் உரக்குடில் ஆகிய மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் | 6.00 | திரு.M.அசன்கனி 0.02% அதிகம் |
| | | | திரு.S.பரமசிவன் ஒப்பந்த மதிப்பை விட 0.01 % குறைவு |

அலுவலக குறிப்பு : (ந.க.எண்.357/2025/இ1)

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.S.பரமசிவன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**மன்றப்பொருள் : 26**

செங்கோட்டை நகராட்சி 24 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகள், பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், கசிவுகள் சரி செய்யவும் சலீஸ் வால்வுகள் வால்வு தொட்டிகள் மற்றும்பொது குழாய்களில் ஏற்படும் பழுதுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை 2025–2026–ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மான எண். 73 நாள்.21.03.2025 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 02.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி 24 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைப்புகள், பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள், கசிவுகள் சரி செய்யவும் சலீஸ் வால்வுகள் வால்வு தொட்டிகள் மற்றும்பொது குழாய்களில் ஏற்படும் பழுதுகள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்தல் 2025–2026–ஆம் ஆண்டில் வருடாந்திர பராமரிப்பு பணி | 4.50 | திரு.M.அசன்கனி 0.01% குறைவு |
| | | | திரு.S.பரமசிவன் ஒப்பந்த மதிப்பை விட 0.2 % அதிகம் |

அலுவலக குறிப்பு : (ந.க.எண்.09/2025/இ1)

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி

வழங்கியுள்ள திரு.M.அசன்கனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.

2. குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**மன்றப்பொருள் : 27**

செங்கோட்டை நகராட்சி வார்டு 1 முதல் 24 வார்டு வரையிலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது, நாள் ஒன்றுக்கு 19.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. செங்கோட்டை நகராட்சியில் தற்போது Liquid Choloirination அளவு குறைவாக இருப்பதால் நகராட்சி பகுதியில் நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக நகர் நல அலுவலர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிக்கு மூன்று மாதத்திற்கு கொள்முதல் செய்ய நகர்மன்ற தீர்மான எண். 64 நாள்.21.03.2025 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 02.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு மூன்று மாதத்திற்கு Liquid Choloirination –விநியோகம் செய்யும் பணி | 3.00 | Sri Sathiya Dyes and Chemical, மதிப்பீட்டு 0.2% சதவீதம் அதிகம் |
| | | | Excellent Chloro System, மதிப்பீட்டு 0.01% குறைவு |

அலுவலக குறிப்பு : (ந.க.எண்.58/2025/இ1)

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Excellent Chloro System நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**மன்றப்பொருள் : 28**

செங்கோட்டை நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் 3 நுண் உரக்குடில்களிலும் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 91 நாள்.21.03.2025 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 02.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் 3 நுண் உரக்குடில்களிலும் ஏற்பட்டுள்ள பழுது பணிகளை மேற்கொள்ளுதல் | 3.00 | திரு,சேக் உதுமான் ஹக்கீம், 0.02% அதிகம் |
| | | | திரு,சேக் அப்துல் காதர், 0.01% குறைவு |

அலுவலக குறிப்பு : (ந.க.எண்.58/2025/இ1)

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு,சேக் அப்துல் காதர் எ'ன்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் : 29**

செங்கோட்டை நகராட்சிக்குட்ப'ட்ட பகுதிகளில் அமைந்துள்ள பொது கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை தூய்மை இந்தியா கணக்கெடுப்பு 2025 மூலம் நகராட்சி மதிப்பீடு செய்ய உள்ளதால் மேற்காணும் கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 97 நாள்.21.03.2025 ன்படி அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 03.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பதப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின்பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சிக்குட்ப'ட்ட பகுதிகளில் அமைந்துள்ள பொது | 5.00 | திரு,சேக் உதுமான் ஹக்கீம், 0.02% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை தூய்மை இந்தியா கணக்கெடுப்பு 2025 மூலம் நகராட்சி மதிப்பீடு செய்ய உள்ளதால் மேற்காணும் கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல் | | திரு,சேக் அப்துல் காதர், 0.01% குறைவு |

அலுவலக குறிப்பு : (ந.க.எண். 50/2025/இ1)

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு,சேக் அப்துல் காதர் எ'ன்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் .

**மன்றப்பொருள் : 30**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண் 23, சுடலையாண்டி காம்பவுண்ட் பகுதியில் புதிய மின் மோட்டார் மற்றும் மோட்டார் அறை அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 (ஒரு லட்சம்)த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்கான செலவு தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 31**

செங்கோட்டை நகராட்சி நகரமைப்பு பிரிவு திரு.கலீல் ரகுமான், த/பெ முகமது அசனார் ராவுத்தர் என்பவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்:89/2008, நாள்:08.03.2023ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது தொடர்பாக இந்நகராட்சி நகர்மன்ற வழக்கறிஞர் திரு.S.கிருஷ்ணமூர்த்தி, B.Com., B.L., அவர்களுக்கு மேற்படி வழக்கு தொகை செலவினமான ரூ.4510/– வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவு தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் : 32**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:1, சைவ பிள்ளையார் கோவில் அருகில் உள்ள திறந்தவெளி கிணற்றில் உள்ள 7.5HP Sub Motor Pump பொருத்தப்பட்டு 30 வருடங்களுக்கு மேலான நிலையில் மேற்படி மோட்டார் அடிக்கடி பழுது ஏற்பட்டு வருவதாலும், தற்போது கோடை காலமாக உள்ளதாலும் ஏற்கனவே காலாங்கரை குடிநீர் பிரதான குழாய் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதாலும் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்கும் வகையில் மேற்கண்ட மோட்டாரை ரூ.1.10 (ஒரு லட்சத்து பத்தாயிரம்) மதிப்பீட்டில் புதிதாக அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவு தொகையினை குடிநீர் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 33**

செங்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம்ல Unit II–ல், உள்ள 30 HP மோட்டார் பழுதடைந்துள்ளதால் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி மோட்டாரை பழுது நீக்கம் செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.1.20 (ஒரு லட்சத்து இருபதாயிரம்) செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 34**

செங்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம்ல Unit III–ல், உள்ள 30 HP மோட்டார் பழுதடைந்துள்ளதால் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி மோட்டாரை பழுது நீக்கம் செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.1.50 (ஒரு லட்சத்து அம்பதாயிரம்) செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 35**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:24 வல்லம் ரோடு கசடு கழிவு சுத்தகரிப்பு நிலையம் அருகில் உள்ள பெண்கள் கழிப்பிடத்தில் உள்ள 2HP மின் மோட்டார் பழுதடைந்துள்ளதை பழுது நீக்கம் செய்ய ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.0.60 (அறுபதாயிரம்) செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 36**

செங்கோட்டை நகராட்சி வார்டு எண்:12 நீராத்திலிங்கம் தெரு பூத்தரம் அருகே புதிய சின்டெக்ஸ் டேங்க் ஆழ்குழாய் பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 (மூன்று இலட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை பொது நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 37**

செங்கோட்டை நகராட்சி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024ன் கீழ் பம்பு ஹவுஸ் ரோட்டில் தினசரி சந்தை கடைகள் கட்டும் பணி மேற்கொளேள்ளப்பட்டது. மேற்படி கடைகளில் எண் 1 முதல் 8 வரை 4 மீட்டர், எண் 9 முதல் 12 வரை 185 மீட்டர், கடை எண் 13 முதல் 19 வரை 250 மீட்டருக்கு Coppoer 3, core 4.5q MM Cable 835 மீட்டர் மற்றும் Clamp washer screw மற்றும் பணியாளர் கூலி ஆகியவை சேர்த்து மொத்தம் செலவு தொகை ரூ.2.00 (இரண்டு இலட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) வருவாய் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை வருவாய் முலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 38**

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்திற்கு 2025-2026ம் ஆண்டிற்கு தேவையான அனைத்து படிவங்கள், பதிவேடுகள், மற்றும் எழுது பொருட்கள் விநியோகம் செய்திட தூத்துக்குடி மாவட்ட உயர் தொழில் நுட்ப அச்சகம் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் கோவில்பட்டி மூலம் கொள்முதல் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 39**

செங்கோட்டை நகர்மன்றத்தின் 13 நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் WP(MD) No.7935 of 2025 படி அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக இயக்குநர், நகர்மன்றத் தலைவர், ஆணையாளர் ஆகியோர் எதிராக 13 நகர்மxன்ற உறுப்பினர்கள் தொடர்ந்த வழக்கு அரசு வழக்கறிஞர் திரு.ஜே.கே ஜெயசீலன் அவர்கள் மூலமாக நடத்தப்பட்டு நீதிப்பேராணை 20.03.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நீதிப்பேராணையில் நகர்மன்ற கூட்டம் உரிய விதிமுறைகளின்படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-க்கு உட்பட்டும் வெளிப்படை தன்மையுடனும் அனைவருக்கும் சமமான வாய்ப்பு அளிக்கும் வகையிலும் அமைய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே அரசு வழக்கறிஞர் திரு.ஜே.கே.ஜெயசீலன் அவர்கள் மூலமாக நடத்தியதற்கும் அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள் : 40**

செங்கோட்டை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஈப்பு வாகனத்திற்கு இஞ்சின் ஆயில் மாற்றி மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி பழுது பணிகளை மேற்கொள்ள DEFIK நிறுவனத்திடமிருந்து ரூ.32964/- க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 41**

செங்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 15வது நிதிக்குழு மான்யம் 2020-2021 ஆம் ஆண்டு Tied Grant நிதியின் கீழ் பம்பு ஹவுஸ் ரோடு முதல் வாஞ்சிநாதன் சிலை வரை Distribution Piple line மற்றும் தலைமை நீரேற்று நிலைய மோட்டார்கள் பழுது செய்யும் பணி மேற்கொண்டதற்கு ஒப்பந்தப்புள்ளியில் கூடுதல் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை ஒப்பந்தக்காரர் பணிப்பட்டியிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டிருந்தது. அத்தொகை திரும்ப வழங்க வேண்டும் என விண்ணப்பம் வழங்கியுள்ளார். மேற்படி காப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை 6 மாத காலம் கடந்து விட்ட நிலையில் ஒப்பந்தகாரருக்கு திரும்ப வழங்கிடலாம் என நகராட்சி பொறியாளர் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதால் மேற்படி வைப்புத் தொகைகளை காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ள காரணத்தினால் ஒப்பந்தக்காரர் திரு.இருளப்பபாண்டியன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| EMD | 27000 |
| ASD | 97190 |
| FSD | 27000 |
| **Total** | **151199** |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 42**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:748/208/கு.வ.2, நாள்:21-09-2009ன் படி நகராட்சி பகுதியில் புதிதாக குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் முந்தைய ஆண்டு தொகையுடன் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி 2025-2029ம் ஆண்டிற்கு சாலை பராமரிப்பு கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 01-04-2025 முதல் 31-03-2025 வரை கீழ்காணும் விபரப்படி கட்டணம் வசூல் செய்து புதிய இணைப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| விபரம் | **கருங்கல் ஜல்லி சாலை** | | **தார்சாலை** | | **சிமிண்ட் சாலை** | |
|---|---|---|---|---|---|---|
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயிலிருந்து 0 முதல் 30 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு | ரூ.2184 | ரூ.2293 | ரூ.4679 | ரூ.4913 | ரூ.5442 | ரூ.5714 |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயிலிருந்து 30 முதல் 90 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு | ரூ.3429 | ரூ.3600 | ரூ.5925 | ரூ.6221 | ரூ.6651 | ரூ.6984 |

**அலுவலக குறிப்பு :** **(ந.க.எண்:1009/2005/இ1)**

2025-2026 ஆம் ஆண்டு வழங்கப்படும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதனை மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் : 43**

செங்கோட்டை நகராட்சி அலுவலக பணிகளுக்கு பயன்பாட்டில் இருந்து வரும் ஜெனரேட்டர் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள குறுகிய கால விலைப்புள்ளி 02.04.2025ல் கோரப்பட்டது. அதன் அடிப்படையில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதியும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | கருவியின் பெயர் | **விலைப்புள்ளி வழங்கிய நிறுவனங்களின் பெயர்** | | |
|---|---|---|---|---|
| 1. | செங்கோட்டை நகராட்சி அலுவலக ஜெனரேட்டர் பழுது நீக்கம் செய்யும் பணி | Generath Service (P) Ltd, Tiruneveli | M.காசியார் எலக்ட்ரிக்கல் பிளம்பிங் & காயல் ரீவைண்டிங், ஒர்க்ஸ் | M.M.Gani Electrical & Plumbing Works, Sengottai |
| | | ரூ.30563/- | ரூ.34352/- | ரூ.32919- |

வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைவிகிதம் வழங்கியுள்ள Generath Service (P) Ltd, Tirunelveli நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1) கோடை காலமாக இருப்பதால் அடிக்கடி ஏற்படும் மின் துண்டிப்பு காலங்களில் அலுவலக பணிகள் தடையின்றி நடைபெறும் பொருட்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இதற்கான செலவு தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இடம் : செங்கோட்டை
நாள் : 24.04.2025

நகர்மன்றத் தலைவர்
செங்கோட்டை நகர்மன்றம்

நகல் :

1. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள்,தென்காசி பாராளுமன்றம்.
2. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம், கடையநல்லூர்.
3. அனைத்து பத்திரிக்கை நிருபர்கள்

ஆணையாளர்/பொறியாளர்/மேலாளர் மேஜைக்கு
நகல் : பொதுப்பணி மேற்பார்வையாளர்/துப்புரவு ஆய்வாளர்/வருவாய் ஆய்வாளர்/ நகரமைப்பு ஆய்வாளர்

செங்கோட்டை நகர்மன்றம்

**செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 2025ம் ஆண்டு ஏப்ரல் 30 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ள சாதாரண கூட்டத்தின் பின்னிணைப்பு மன்றப்பொருள் :**

**மன்றப்பொருள் : 44**

இந்நகராட்சியிலுள்ள பூங்கா மற்றும் கேசி ரோடு மற்றும் பம்பு ஹவுஸ் ரோடில் அமைந்துள்ள நீர்நிலையங்களில் புல் மற்றும் செடி, கொடிகள் அடிக்கடி வளர்வதால் அகற்ற சுகாதார கேடு ஏற்பட்டு வருவதால் மேற்படி புல் மற்றும் செடி, கொடிகளை உடனுக்குடன் வெட்டி அகற்றும் பொருட்டு ஒரு புல் வெட்டும் இயந்திரம் தேவைப்படுகிறது. மேற்படி இயந்திரம் வாங்க உத்தேச செலவினம் ரூ.35,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) சுகாதாரத்தின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்கான செலவு தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 45**

மழைக்காலங்களில் மரங்கள் அடிக்கடி சாலைகளில் விழுந்து விடுவதால் மேற்படி மரத்தினை வெட்டி அப்புறப்படுத்த ஒரு மரம் அறுக்கும் இயந்திரம் வாங்க வேண்டியுள்ளது. மேற்படி இயந்திரம் வாங்க உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இதற்கான செலவு தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 46**

இந்நகராட்சி 1வது வார்டு ரெங்கநாதன் தெருவில் புதிதாக ஆழ்துளை கிணறு மற்றும் மினி பவர் பம்பு அமைக்க மதிப்பீடு ரூ.2,50,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் அல்லாத பொதுமக்கள் பயன்பாடு கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இதற்கான செலவு தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 47**

இந்நகராட்சி 1வது வார்டு சங்கர சுப்பிரமணியன் தெருவில் ஏற்கனவே உள்ள அடிபம்பினை அகற்றிவிட்டு புதிய மினி பவர் பம்பு அமைக்க மதிப்பீடு ரூ.1,50,000/- ( ஒரு இலட்சத்து அம்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் அல்லாத பொதுமக்கள் பயன்பாடு கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இதற்கான செலவு தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 48**

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:7, சேர்வைக்காரன் புதுத்தெருவில் உள்ள அடிபம்பை எடுத்து விட்டு புதிய மினி பவர் பம்பு அமைக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1.50 (ஒரு இலட்சத்து அம்பதாயிரம்)த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 49**

செங்கோட்டை நகராட்சி வல்லம் ரோடு பகுதியில் அமைந்துள்ள கசடு கழிவு சுத்தகரிப்பு நிலையத்தில் உள்ள Filter Champer Collection Tank ஆகியவற்றில் உள்ள அலுமினிய மூடிகள் 60 எண்ணம் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.2.00 (இரண்டு இலட்சம்) -த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் : 50**

செங்கோட்டை நகராட்சி கசடு கழிவு சுத்தகரிப்பு நிலையத்தில் தயாரிக்கப்பட்ட இயற்கை உரம் வைப்பதற்கு போதிய இட வசதி இல்லாமல் திறந்தவெளியில் வைக்கப்படுகிறது. எனவே உர மூட்டைகள்

வைப்பதற்கு ஓர் அறை கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.5.00 (ஐந்து இலட்சம்) –த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் : 51**

செங்கோட்டை நகராட்சி தனியார் துப்புரவு பணி மேற்கொண்டு வந்த ராம்&கோ நிறுவனம் 15.11.2024ல் பணியிலிருந்து விலகியதால் மகளிர் சுய உதவிக்குழுக்கள் கொண்டு தூய்மை பணி செய்யப்பட்டு வருகிறது. நகர்மன்ற தீர்மானம் எண்:65/21.03.2025ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்பட்டு மாற்று நிறுவனம் தேர்வு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் 28.03.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியை தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.1,26,000/– (ஒரு இலட்சத்து இருபத்தாராயிரம்)–த்திற்கு Vipras நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1) சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) செலவினத் தொகையினை வருவாய் மூலதன நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள் : 52

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை (செவ்வாய்) உரிமம் மற்றும் 93 ஸ்டால் வசூலிக்கும் குத்தகை உரிமத்திற்கு 21,03,2025ல் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்ல. ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | உட்பட்ச ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1. | திரு,அ.சங்கர்<br>த/பெ A.V.அண்ணாமலை<br>10–7–36A, ராமசாமி தெரு<br>செங்கோட்டை | ரூ.9,36,000/– |
| 2. | திரு,அ,நிரஞ்சன்<br>த/பெ அந்தோணிராஜ்<br>1/55C, அலுவலர் குடியிருப்பு<br>பெரிய கோவிலான்குளம் | ரூ.9,32,000/– |

எனவே பட்டியலில் கண்டவாறு அரசு மதிப்பை விட ஒப்பந்தப்புள்ளியில் உட்சபட்ச ஒப்பந்தபுள்ளி கேள்வி ரூ.9,36,000/– கூடுதலாக திரு,அ.சங்கர் என்பவர் ஒப்பந்தப்புள்ளி கேள்வி கோரியுள்ளதால் மேற்படி குத்தகை உரிமத்தினை 01.04.2025, முதல் முன்று நிதியாண்டிற்கு உரிமம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

(ந.க.எண் 3095/2015/அ1)

மன்றம் அனுமதிக்கலாம்.

R. ராமலட்சுமி.

நகர்மன்றத் தலைவர்
செங்கோட்டை நகர்மன்றம்

இடம் : செங்கோட்டை
நாள் : 25.04.2025

நகல் :

1. மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள்,தென்காசி பாராளுமன்றம்.
2. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம், கடையநல்லூர்.
3. அனைத்து பத்திரிக்கை நிருபர்கள்

ஆணையாளர்/பொறியாளர்/மேலாளர் மேஜைக்கு

நகல் : பொதுப்பணி மேற்பார்வையாளர்/துப்புரவு ஆய்வாளர்/வருவாய் ஆய்வாளர்/ நகரமைப்பு ஆய்வாளர்

| | | |
|---|---|---|
| | | விலைவிகிதம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 26 | 130 | குறைந்த விலை விகிதம் அளித்துள்ள திரு அசன்கனி அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 27 | 131 | அலுவலக குறிப்பு ஏற்று எக்ஸ்லண்ட் குளோரோ சிஸ்டம் ஒப்பந்தபுள்ளி ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 28 | 132 | குறைந்த விலை விகிதம் அளித்துள்ள திரு சேக் அப்துல் காதர் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 29 | 133 | குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள திரு சேக்அப்துல் காதர் அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்று அனுமதி வழஙகப்பட்டது. |
| 30 | 134 | அனுமதி வழஙகப்பட்டது. |
| 31 | 135 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 32 | 136 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 33 | 137 | அனுதி வழ்ங்கப்பட்டது. |
| 34 | 138 | அனுமதி வழங்கப்பட்டது |
| 35 | 139 | அனுமதி வழங்கப்பட்டது |
| 36 | 140 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 37 | 141 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 38 | 142 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 39 | 143 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 40 | 144 | அனுமதி வழஙகபபட்டது. |
| 41 | 145 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 42 | 146 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 43 | 147 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழஙகப்பட்டது. |
| 44 | 148 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 45 | 149 | அனுமதி வழஙகப்பட்டது. |
| 46 | 150 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 47 | 151 | அனுமதி வழங்கப்பட்டது |
| 48 | 152 | அனுமதி வழங்கப்பட்டது |
| 49 | 153 | அனுமதி வழங்கப்பட்டது |
| 50 | 154 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 51 | 155 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 52 | 156 | அனுமதி வழங்கப்பட்டது. |

(ஒம்) ரா.ராமலட்சுமி
நகர்மன்ற தலைவர்

பெறுநர்,
நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள்,
அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் செங்கோட்டை நகரமன்றம்

நகல்.. ஆணையாளர்/மேலாளர் /பொறியாளர் மேசைக்கு
நகல்.. அறிவிப்பு பலகை
நகல்.. கணினி உதவி திட்ட அமைப்பாளர், இணையதள பதிவிற்காக

உண்மை நகல்

ஆணையாளர்
செங்கோட்டை நகராட்சி

06/05/25
65528

செங்கோட்டை நகரமன்றம்

செங்கோட்டை நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் 30.4.2025 அன்று 11.30 மணிக்கு நடைபெற்றதின் நடவடிக்கை எடுகுறிப்பு

| பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | 105 | அனுமதி வழங்கப்பட்டது |
| 2 | 106 | அனுமதி வழங்கப்பட்டது |
| 3 | 107 | அனுமதி வழங்கப்பட்டது |
| 4 | 108 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 5 | 109 | அனுமதி வழங்கப்பட்டது |
| 6 | 110 | அனுமதி வழங்கப்பட்டது |
| 7 | 111 | அனுமதி வழங்கப்பட்டது |
| 8 | 112 | அனுமதி வழங்கப்பட்டது |
| 9 | 113 | அனுமதி வழங்கப்பட்டது |
| 10 | 114 | அலுவலக குறிப்பு பரிசீலிக்கப்பட்டது . துறை மூலமாக வசூலிக்கப்பட்டால் நிதியிழப்பு ஏற்படும் என்பதாலும், அரசு மதிப்பிலிருந்து 10 சதவீதம் குறைவு செய்து பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி நடத்திடவும், வைப்புத்தொகை ரூ.1.00 லட்சம் மற்றும் காப்புத்தொகை ரூ.1.00 லட்சம் என நிர்ணயம் செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. |
| 11 | 115 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 12 | 116 | அலுவலக குறிப்பு மன்றத்தில் பரிசீலிக்கப்பட்டது அரசு மதிப்பு தொகையில் 10 விழுக்காடு குறைவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. காப்புத்தொகை ரூ.80000/– நிர்ணயிக்கலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. |
| 13 | 117 | அலுவலக குறிப்பு மன்றத்தில் பரிசீலிக்கப்பட்டது. அரசாணை (2ப) எண் 66 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 06.08.2024 பத்தி 3 உபபத்தி IV வழிகாட்டுதல் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள கடைகள் முகப்பு பகுதியிலிருந்து விலகி நேரடியாக அணுகமுடியாத கடைசியில் உள்ள பகுதிகளாக இருக்கும் கடைகள் என்பதால் தற்போதைய வாடகையிலிருந்து 20 விழுக்காடு குறைவு செய்து மறுஏலம் ஒப்பந்தபுள்ளி நடத்தவும், காப்புத்தொகை மற்றும் வைப்புத்தொகை ரூ.1.00 லட்சம் வசூலிக்கலாம் எனவும் முடிவு செய்து தீர்மானிக்கப்பட்டது. |
| 14 | 118 | அலுவலக குறிப்பு அனுமதி வழங்கப்பட்டது. |
| 15 | 119 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 16 | 120 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 17 | 121 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழஙகப்பட்டது. |
| 18 | 122 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பபட்டது |
| 19 | 123 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது |
| 20 | 124 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 21 | 125 | அனுமதி வழங்கப்பட்டது |
| 22 | 126 | அனுமதி வழங்கப்பட்டது |
| 23 | 127 | அனுமதி வழங்கப்பட்டது |
| 24 | 128 | குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள திரு இசக்கி அவர்களின் விலைவிகிதம் ஏற்று அனுமதி வழங்கப்பட்டது. |
| 25 | 129 | குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள திரு எஸ்.பரமசிவன் அவர்களின் |